# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். **126/2015**

ஆணை எண். **188/2016**

நாள் : **03/12/2016**

திரு. பி. பாலமுருகன்.
தலைவர்,
கட்டிட பொறியாளர்கள் நிறுவனம்
சென்னை –33

**– முறையீட்டு மனுதாரர்**

ஆணையாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்.

**– எதிர் மனுதாரர்**

சென்னை, மேற்கு மாம்பலம், லேக்வியூ சாலை, எண்.168/177–ல் இயங்கிவரும் கட்டிடப்பொறியாளர்கள் நிறுவனத்தின் தலைவர் திரு. பி. பாலமுருகன் அவர்களது 19.06.2015 நாளிட்ட முறையீட்டு மனு 29.06.2015 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 126/15 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. கட்டிட வரைபட விண்ணப்பம் மற்றும் அனுமதி வழங்குவது சம்பந்தமான மனுதாரின் மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை, மேற்கு மாம்பலம், லேக்வியூ சாலை, எண். 168/177–ல் செயல்பட்டு வரும் கட்டிடப்பொறியாளர்கள் நிறுவனத்தின் தலைவர் திரு. பி. பாலமுருகன் அவர்கள் சென்னை மாநகராட்சியில் கட்டிட வரைபட விண்ணப்பம் மற்றும் அனுமதி பெறுவது சம்பந்தமாக உள்ள நடைமுறை சிக்கல்கள் குறித்து இம்முறைமன்ற நடுவத்திற்கு முறையீடு செய்துள்ளார். மனுதாரரின் முறையீட்டு மனு குறித்து இம்முறைமன்ற நடுவத்தின் கடிதம் ந.க. எண்.அ1/0126/2015, நாள் 22.07.2015 ன் மூலம் சென்னை மாநகராட்சி மத்திய வட்டார மேற்பார்வை பொறியாளரிடம் அறிக்கை கோரப்பட்டது. சென்னை மாநகராட்சி மத்திய வட்டார மேற்பார்வை பொறியாளர் தனது 18.03.2016 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் முறையீட்டு மனு சம்பந்தமாக சென்னை மாநகராட்சி வடக்கு மற்றும் தெற்கு மண்டலங்களிலிருந்து அறிக்கை பெற்று ஒருங்கிணைந்த நடவடிக்கை மேற்பார்வை

/2/

பொறியாளர் (பணிகள்) அவர்களால் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்துள்ளார். இந்நிலையில் 29.06.2016 அன்று மனுதாரரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையின் போது மனுதாரர் கீழ்க்காணும் நடைமுறை குறைபாடுகள் குறித்து வாக்குமூலம் அளித்தார்:-

(அ) கட்டிடம் கட்ட அனுமதிக்கு எந்தெந்த விண்ணப்பங்கள் எந்த ஆவணங்கள் தேவை என்பது போன்ற விவரங்கள் வெளிப்படையாக இல்லை.

(ஆ) சம்பந்தப்பட்ட மாநகராட்சி பொறியாளர்கள் பினாமி பெயரில் தனியாக கன்சல்டண்ட் அலுவலகம் நடத்தி வருவதாகவும் அதன் மூலம் வரைபட அனுமதி அனுப்பினால் மட்டுமே உரிய காலத்தில் அனுமதி பெறமுடியும் என்ற நிலை உருவாவதாக தெரியவருகிறது.

(இ) ஆன்லைனில் அனுமதியான வரைபடங்களை பொறியாளர்கள் தேவையில்லாமல் திருத்துகின்றனர். இதைப் பார்த்தால் ஆன்லைன் விண்ணப்பம் தேவையில்லை என்று தெரிகிறது.

(ஈ) கட்டிடம் கட்டியபின் உரிமம் பெற்ற அளவையரிடம் அக்கட்டிடம் பற்றி ஆய்வு மேற்கொண்டு அறிக்கை அளிப்பது எல்லாம் சம்பந்தப்பட்ட மாநகராட்சி பொறியாளர் செய்யவேண்டிய வேலை இவை அனைத்தையும் உரிமம் பெற்ற அளவையர் செய்ய வேண்டும் என்று கூறுவது முறையல்ல.

(உ) கட்டிட விண்ணப்பத்திற்கு தேவையான ரெக்கார்டுகள் அனைத்தும் முறையாக எழுத்து மூலம் அனுமதிக்கப்பட்ட தேவைகளாகத்தான் இருக்கவேண்டுமே ஒழிய வாய்மொழி உத்தரவுகள் மற்றும் தேவைகள் தவிர்க்கப்படவேண்டும்.

(ஊ) கட்டிட வரைபடம் விரைவாக கிடைக்க De-Centralised அதாவது ஒவ்வொரு மண்டலத்திற்கு உட்பட்ட வரைபடங்கள் அந்தந்த மண்டலத்திலேயே சமர்ப்பிக்க அனுமதி பெறுவது.

(எ) பக்கத்து இடத்தின் விவரங்களை கோருவதால் ஏற்படும் பிரச்சினைகள்.

2. மேற்குறிப்பிட்ட மனுதாரரின் முறையீடுகள் சம்பந்தமாக சென்னை மாநகராட்சி, மத்திய வட்டார அலுவலக மேற்பார்வை பொறியாளர் தனது அறிக்கையில் பக்கத்து வீட்டு புகைப்படங்கள், அளவுகள் மனுதாரரிடம் மத்திய வட்டார அலுவலகத்தில் கோரப்படுவதில்லை என்றும், மேற்கண்ட விவரங்கள் நகரமைப்பு உதவி பொறியாளர்கள் கள ஆய்வு செய்து உரிய படிவத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது என்றும், உரிமை பெற்ற அளவையாளர்களின் விவரங்கள் பதிவு செய்யப்பட்டு, அவை சரிபார்க்க மட்டுமே செய்யப்படுகிறது என்றும், இதன் மூலம் பதிவு பெறாத நில அளவையாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அவர்களையும் பதிவு செய்ய அறிவுறுத்தப்படுகிறது என்றும், ஒவ்வொரு முறையும் விண்ணப்பம் அளிக்கும் பொழுது தகவல்கள் கோரப்படுவதில்லை

என்றும், கட்டிடங்கள் கட்டப்படும் பொழுது விதிகளின் படி தான் கட்டப்படுகிறதா என பார்வையிட்டு, அறிக்கை தாக்கல் செய்ய வேண்டியது பதிவு பெற்ற நில அளவையாளர்கள் பொறுப்பாகும் என்றும், கட்டிட அனுமதி கோரும் பொழுது, அவை முறையாக உள்ளதா என பரிசீலிப்பது விதிகளின்படி உள்ள ஒரு நடவடிக்கையாகும் என்றும், மேலும் இதன் மூலம் மனுக்களில் உள்ள தவறுகளை சரி செய்து கொள்ள ஒரு வாய்ப்பாக அமையும் என்றும் தெரிவித்துள்ளார்.

3. மேற்கூறிய சூழ்நிலையில், மனுதாரரின் முறையீட்டு மனுவில் (நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது) மனுதாரர் தெரிவித்துள்ள கருத்துக்களை சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுடன் கலந்தாலோசித்து எல்லோரும் எளிதில் அறிந்து கொள்ளும் வகையிலும் வெளிப்படைத்தன்மை இருக்கும் வகையிலும் பலதடவை பொதுமக்கள் அலைவதை தவிர்த்து ஒரேநேரத்தில் சட்டபூர்வமாக எந்தெந்த ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்பதையும் பரிசீலித்து உரிய வழிமுறைகள் வகுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு சென்னை மாநகராட்சிக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2016 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3– ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்

மாநகராட்சி ஆணையர்,
சென்னை பெருநகர மாநகராட்சி,
சென்னை – 3.

**மேற்பார்வை பொறியாளர் (பணிகள்),**
**பணித் துறை**
**சென்னை மாநகராட்சி,**
**சென்னை – 600 003(இணைப்புடன்).**

**திரு. பி. பாலமுருகன்.,**
**தலைவர்,கட்டிட பொறியாளர்கள் நிறுவனம்**
**சென்னை –33.**

நகல்

உறுப்பினர் செயலர்,
சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம்,
**தாளமுத்து நடராஜன் மாளிகை,**
**சென்னை –8 (இணைப்புடன்).**